கிருஷ்ணா கலை & அறிவியல் கல்லூரி, கொண்டத்தண்ணீர்ப்பட்டி - கரூர்.

இணையவழிக் கற்பித்தல் - முதன்மைப்பாடம் - உ

நன்னூல் - சொல்லதிகாரம் [காண்டிகை உரை]

## அலகுகள் - 5

1. பெயரியல்
2. வினையியல்
3. பொதுவியல்
4. இடையியல்
5. உரியியல்.

நன்னூல் - எழுத்ததிகாரத்தில் சிறப்புப்பாயிரம், பொதுப்பாயிரம், எழுத்திலக்கணத்தின் பகுதிகளான எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை முதல்நிலை, இடைநிலை, இறுதிநிலை, போலி, பதம், புணர்ச்சி ஆகியவற்றைக் கண்டோம். முழுவதுமாக எழுத்துக்களை மட்டுமே அதில் அறிந்து கொண்டோம்.

## நன்னூல் - சொல்லதிகாரம்

உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும், சுட்டிக்காட்டவும், உணரவும் மற்றும் வேறுபடுத்திக் காட்டவும் பெயர்கள் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றன. இதுவே பெயரியல் என்று நன்னூல் இலக்கணம் வகுக்கின்றது.

## சொல்லின் பொது இலக்கணம்:

**சொல்:**

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருளைத் தருமானால் அதுவே சொல் எனப்படும்.

**சொல்லின் வேறு பெயர்கள்:**

பதம், மொழி, கிளவி.

சொல்லின் பொது இலக்கணம் (6)

1. மூவகை மொழிகள்
2. இருதிணை - ஐம்பால்
3. சொல்
4. மூவிடங்கள்
5. வழக்கு
6. குறிப்பு - வெளிப்படை

**நூற்பா - 259:**

"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் தெரிப்பது சொல்லே"

சொல் கருவியாய் நின்று தன்னையும் உணர்த்தி மற்ற ஐந்து வகைகளையும் உணர்த்தி இருப்பதே சொல்லின் பொது இலக்கணம் ஆகும்.

Scanned with CamScanner